**பாடம் 10**

# வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்கள்



**மனன வசனம்**

**ஆதலால், எவன்மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். ரோமர் 9:18.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 9**

டிசம்பர் 2 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

'யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார்.' ரோமர் 9:13,15.

மனிதர்களுக்கு சுயசித்தமும், தீர்மானிக்கிற உரிமையும் இருக்கிறதென்றால், தேவனைத் தெரிந்துகொள்ளவோ, புறக்கணிக்கவோ நமக்கு உரிமையில்லையா? ஒருவருடைய தீர்மானங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும், சிலர் இரட்சிப்புக்கும், சிலர் தள்ளப்படுவதற்கும் தெரிந்துகொள்ளப்படுவார்களென்று இந்த வசனங்கள் சொல்கின்றனவா?

பவுல் எதைப்பற்றிப் பேசுகிறாரென முதலில் கவனிக்கவேண்டும். தாம் பயன்படுத்த விரும்புகிறவர்களைத் 'தெரிந்துகொள்ளுவதற்கு' தேவனுக்கு உரிமை இருக்கிறது. அதுபற்றியே பவுல் அங்குப் பேசுகிறார். உலகத்திற்கு நற்செய்தியை அறிவிப்பதில் முழு உரிமையும் தேவனுக்குத்தாம் உண்டு. எனவே, தாம் விரும்புகிறவர்களை தம் பிரதிநிதிகளாக அவர் தெரிந்துகொள்ளுகிறார். இரட்சிப்பைப் பெறுகிற வாய்ப்பை எல்லாருக்கும் வழங்கியிருப்பதால், தம் பணிக்காக தாம் விரும்புகிறவர்களை அவர் தேர்ந்தெடுப்பது எவ்விதத்திலும் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பறிப்பதாக இருக்காது. கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார்; எல்லாரும் இரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார் என்கிற மாபெரும் சத்தியத்தையும் அது பொய்யாக்கிவிடாது.

ரோமர் 9ம் அதிகாரமானது, அதில் சொல்லப்படுபவர்களின் தனிப்பட்ட இரட்சிப்புகுறித்து எவ்விதத்திலும் பேசவில்லை; ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அவர்கள் அழைக்கப்பட்டதுபற்றிப் பேசுகிறது; அப்படி நாம் பார்த்தால்தான், அந்த அதிகாரத்தை விளங்கிக்கொள்வதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது.

2017, டிசம்பர் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## பவுலின் பாரம்

*'நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்.' யாத்திராகமம் 19:6.*

அவபக்தியிலும் அந்தகாரத்திலும் விக்கிரகாராதனையிலும் மூழ்கியிருந்த ஜனங்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் ஒருகூட்ட மக்கள் தேவனுக்குத் தேவைப் பட்டார்கள். அவர் இஸ்ரவேலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர்கள் முன்மாதிரியான ஒரு தேசத்தினராக விளங்கவும், மெய்யான தேவனிடம் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கவும் அவர் திட்டமிட்டார். 'இஸ்ரவேலர் மூலம் தம்முடைய குணத்தை வெளிப்படுத்தி' உலகத்தாரை 'தம்மிடம் இழுப்பது தேவனிடம் திட்டமாக இருந்தது.' - *EGW, COL, p 290.* 'பலிமுறை ஆராதனைகள் சுட்டிக்காட்டியவைகளின்மூலம் கிறிஸ்துவானவர் தேசங்களுக்குமுன் உயர்த்தப்படவும், அவரை நோக்கிப்பார்க்கிற அனைவரும் பிழைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. இஸ்ரவேலரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, உலகம் முழுவதிலும் அவர்களுடைய ராஜ்யம் பரவும் அளவுக்கு அவர்கள் தங்களுடைய எல்லைகளை விரிவாக்கவேண்டியிருந்தது.'

***மனிதர்களின் தோல்விகளுக்குமத்தியிலும் தேவன் உண்மையுள்ளவராக இருந்ததுபற்றி ரோமர் 9:1-12இல் பவுல் என்ன சொல்லுகிறார்?***

இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி முற்றிலுமாக நிறைவேறாமல் போகவில்லை என்பதையே பவுல் சொல்லவருகிறார். மீதமான ஒரு கூட்டத்தார் இருந்தார்கள்; அவர்கள்மூலம் தேவன் தம் திட்டத்தை நிறைவேற்ற திட்டமிட்டார். அப்படியொரு மீதமான கூட்டத்தார் இருப்பது உண்மையென நிரூபிக்க இஸ்ரவேலரின் வரலாற்றை பவுல் சுட்டிக்காட்டுகிறார். தேவன் எப்போதுமே மனிதர்களைத் தேர்வுசெய்துதான் செயல்பட்டிருக்கிறார்:

1) **தம் உடன்படிக்கையின் மக்களாக ஆபிரகாமின் சந்ததியார் அனைவரையும் தேவன் தேர்ந்தெடுக்கவில்லை; ஈசாக்கின் சந்ததியைமட்டுமே தேர்ந்தெடுத்தார்;**
2) **ஈசாக்கின் சந்ததியார் அனைவரையும் தேர்ந்தெடுக்காமல், யாக்கோபின் சந்ததியாரைமட்டுமே தேர்ந்தெடுத்தார்.**

பாரம்பரியத்தை அல்லது வம்சவரலாற்றை வைத்து இரட்சிப்பு வழங்கப்படுவதில்லை. நீங்கள் சரியான வம்சத்தை, சரியான குடும்பத்தை, சரியான சபையைச் சேர்ந்தவராக இருந்தும், தொலைந்துபோனவராக, வாக்குத்தத்தத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வாய்ப்புள்ளது. 'வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகள்' யார் என்பதை அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசம்மட்டுமே வெளிப்படுத்து கிறது.

'இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே' என்று ரோமர் 9:6 கூறுகிறது. முன்பு இஸ்ரவேலர் இருந்த அதே சிலாக்கியமான நிலையில்தான் இன்று பலவிதங்களில் அட்வென்ட்டிஸ்டுகளாகிய நாம் இருக்கிறோம்; நமக்கு இதிலுள்ள முக்கியச் செய்திகள் என்ன?

*'மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது.'* ரோமர் *9:12,13.*

ரோமர் 9இல் தனிநபர்களின் இரட்சிப்புபற்றி பவுல் பேசவில்லை; குறிப்பிட்ட நபர்களை குறிப்பிட்ட செயல்களுக்காக தேவன் அழைத்தாரென்று கூறுகிறார். உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் ஒரு விசேஷித்த கூட்டத்தாருக்கு தகப்பனாக யாக்கோபைத் தெரிந்துகொள்ள தேவன் விரும்பினார். ஏசாவுக்கு இரட்சிப்பு மறுக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படவே இல்லை. எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட தேவன் விரும்புவது போலவே ஏசா இரட்சிக்கப்படவும் விரும்பினார்.

***இதுவரையிலும் நாம் படித்த விஷயங்களை வைத்து, ரோமர் 9:14,15 வசனங்களை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?***

மீண்டும் தனிநபருடைய இரட்சிப்புகுறித்து பவுல் இங்கு பேசவில்லை; ஏனென்றால், எல்லார்மேலும் அவர் இரக்கமுடையவராக இருக்கிறார்; 'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட, அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.' 1தீமோ 2:4. 'எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகியது.' தீத்து 2:11. எந்தத் தேசத்தாருக்கு என்ன பங்கைக் கொடுக்க வேண்டுமென தேவன் தீர்மானிக்கமுடியும்; அந்தப் பொறுப்புகளை அவர்கள் மறுத்தாலும்கூட தேவனுடைய திட்டத்தை அவர்கள் தடுக்கமுடியாது. மேசியாவின் முற்பிதாவாவதற்கு அல்லது தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் முற்பிதாவாவதற்கு ஏசா எவ்வளவுதான் தீவிரமாக விரும்பினாலும்கூட அதற்கு வாய்ப்பில்லாதிருந்தது.

தேவனுடைய தன்னிச்சையான முடிவாலோ, கட்டளையாலோ ஏசாவுக்கு இரட்சிப்பு மறுக்கப்படவில்லை. கிறிஸ்துவின்மூலம் கிருபையின் ஈவு எல்லாருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. நாம் தொலைந்துபோவதற்கு அல்ல, இரட்சிக்கப்படத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். எபே 1:4,5; 2பேதுரு 1:10. தேவனுடைய தீர்மானம் அல்ல, நம்முடைய தீர்மானங்கள்தாம் கிறிஸ்துவுக்குள்ளான நித்திய வாழ்வின் வாக்குறுதியை நாம் பெறவிடாமல் செய்கின்றன. எல்லாருக்காகவும் கிறிஸ்து மரித்தார். ஆனால், நித்திய வாழ்வை விரும்பும் ஒவ்வோர் ஆத்துமாவுக்கும் தேவன் தம் வார்த்தையில் நிபந்தனைகளை விதித்திருக்கிறார். அதாவது கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும்; அதுதான் நீதிமானாக்கப்பட்ட பாவியை கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தும்.

உலகத்தில் யாருமே இல்லாததுபோல, கிறிஸ்துவில் இரட்சிப்பைப் பெற உலகத் தோற்றத்துக்கு முன்னரே நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டீர்கள். இதுதான் உங்கள் அழைப்பு; உங்கள் தெரிந்துகொள்ளுதல்; இயேசுவின்மூலம் இவை அனைத்தையும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். என்ன சிலாக்கியம்! என்ன நம்பிக்கை! இந்த மாபெரும் வாக்குறுதியோடு ஒப்பிடும்போது மற்ற அனைத்தும் ஒன்றுமே இல்லை. இயேசுவில் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதை பாவமோ, சுயநலமோ, மாம்சநாட்டமோ பறித்துச்செல்ல அனுமதித்தால், அது ஏன் எல்லாவற்றிலும் பெரிய இழப்பாக இருக்கும்?

## மறைபொருள்கள்

*'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.' ஏசாயா 55:8,9.*

**இதுவரையிலும் நாம் வாசித்த விஷயங்களை மனதில் வைத்து ரோமர் 9:17-24 வசனங்களை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**

இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவிப்பதற்கு தேவன் செயல்பட்ட விதமானது, மனித இனத்தின் இரட்சிப்புக்காக அவர் செயல்பட்ட கிரியையாக இருந்தது. எகிப்தியருக்குக் கொடுக்கப்பட்ட வாதைகளிலும், தம்முடைய மக்களை அவர் விடுவித்ததிலும் அவர் தம்மை வெளிப்படுத்தியதற்கு நோக்கமிருந்தது. அதாவது, எகிப்தியர்களும் பிறதேசத்தாரும், இஸ்ரவேலின் தேவனே மெய்யான தேவன் என்று அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார். பிற தேசத்தார் தங்கள் தேவர்களை உதறித் தள்ளிவிட்டு, தேவனிடம் வந்து, அவரைத் தொழுதுகொள்வதற்கு கொடுக்கப்பட்ட அழைப்பாக அது இருந்தது.

தேவனுக்கு எதிராக பார்வோன் தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்தான்; அவனுக்கு இரட்சிப்பை மறுப்பதற்காக அவனுடைய இருதயத்தை கடினமடையச் செய்யவில்லை. இஸ்ரவேலரை அனுப்பவேண்டுமென்று வேண்டுகோளுக்கு எதிராக கடினப்பட்டானே ஒழிய, இரட்சிப்புகுறித்து தேவன் கொடுக்கும் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதற்கு எதிராகக் கடினப்படுத்தப்படவில்லை. மோசேக்காகவும் ஆரோனுக்காகவும் இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்ததுபோலவே, பார்வோனுக்காகவும் மரித்தார்.

நாம் விழுந்துபோன மனிதர்கள்; உலகம்பற்றியும், நிஜம்பற்றியும், தேவனைப்பற்றியும், உலகத்தில் அவர் செயல்படுகிற விதம்பற்றியும் குறுகிய பார்வை உடையவர்களாகவே இருக்கிறோம். உலகத்திலும்கூட நாம் புரிந்துகொள்ள முடியாத எவ்வளவோ புதிர்கள் இருக்கின்றன; அப்படியானால் தேவனுடைய வழிகள் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளமுடியுமா? அறுவை சிகிச்சை செய்வதற்குமுன் கைகளைக் கழுவினால் நல்லது என்று 171 வருடங்களுக்கு முன்தான் மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள்! அவ்வளவுக்கு அறியாமை உள்ளவர்கள் நாம். எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்பட இருக்கும் இன்னும் எத்தனை விஷயங்கள் இப்போது நாம் எவ்வளவு அறியாமையில் இருந்தோம் என்பதை சொல்லப்போகின்றனவோ!

தேவனுடைய வழிகளை நாம் புரிந்துகொள்ளமுடியாது, ஆனால் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை வெளிப்படுத்த இயேசு வந்தார். யோவான் 14:9. மறைபொருட்களும், எதிர்பாராத நிகழ்வுகளும் இருந்தாலும், கிறிஸ்துவின் குணத்தைத் தியானிப்பதும் தேவனையும் அவர் அன்பையும்பற்றி அவர் வெளிப்படுத்தியுள்ளதைத் தியானிப்பதும் ஏன் முக்கியமானது? தேவனுடைய குணத்தை அறிவதால், அநியாயமாக நாம் சோதிக்கப்படும்போதும் உண்மையோடு வாழ்வதற்கு எவ்வாறு உதவியாக இருக்கும்?

ரோமர் 9:25இல் ஓசியா 2:23ஐயும், ரோமர் 9:26இல் ஓசியா 1:10ஐயும் பவுல் மேற்கோள் காட்டுகிறார். இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தேவர்களை நாடிச் சென் றார்கள்; தேவனைத் தேடவில்லை; அதைச் சுட்டிக்காட்டும்விதத்தில் ஒரு 'சோர ஸ்திரீயை' சேர்த்துக்கொள்ளும்படி ஓசியாவுக்கு தேவன் கட்டளையிட்டார். இந்த விவாகம்மூலம் பிறந்த பிள்ளைகளுக்கு, விக்கிரகாராதனைக்கார இஸ்ரவேலரை தேவன் புறக்கணித்ததையும், தண்டிக்கவிருந்ததையும் சுட்டிக்காட்டும் விதத்தில் பெயர்கள் சூட்டப்பட்டன. மூன்றாவது பிள்ளைக்கு 'லோகம்மீ' என்று பெயர் சூட்டப்பட்டது; 'என் ஜனமல்ல' என்று இதற்கு அர்த்தமாகும்.

தேவன் தம் மக்களைத் தண்டித்தபிறகு, அவர்களுடைய பொய்த்தேவர்களை எல்லாம் அகற்றி, அவர்களுடைய சூழ்நிலைகளை எல்லாம் மாற்றி, அவர்களோடு ஓர் உடன்படிக்கைசெய்யும் ஒரு காலம் வருமென்று ஓசியா முன்னுரைத்தார். பார்க்க: ஓசியா 2:11-19. லோகம்மீ (என் ஜனமல்ல) என்று அழைக்கப்பட்டவர்கள் அம்மீ (என் ஜனம்) என்று அழைக்கப்படுவார்கள்.

பவுல்தன்காலத்தினரிடம் 'யூதரிலிருந்துமாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே;' அம்மீகளாக்கியுள்ளாரே என்று சொல்கிறார். ரோமர் 9:24. சுவிசேஷம்குறித்த ஒரு வல்லமையான காட்சி இது; உலகத்தார் அனைவருக்கும் அறிவிக்கப்படும்படி உலகத்தோற்றத்திற்குமுன்னரே இது திட்ட மிடப்பட்டது. 'வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசே ஷத்தை உடையவனாயிருந்தான்' என்று வெளி 14:6இன் அழைப்பை செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் நிறைவேற்றுகிறோம். முற்கால இஸ்ரவேலரின் நாட்களில் இருந்ததுபோலவே, பவுலின் நாட்களில் இருந்ததுபோலவே, இன்றைய நாட் களிலும் இரட்சிப்பின் நற்செய்தியானது உலகம்முழுவதிற்கும் செல்லவேண்டும்.

***தன்னுடைய கால நிகழ்வுகளை மனதில் வைத்து, தன் கருத்தை வலியுறுத்து பழைய ஏற்பாட்டு வசனங்களை ரோமர் 9:25-29இல் பவுல் அதிகமாக வலியுறுத்துகிறார். இந்த வசனங்களில் சொல்லப்படும் செய்தி என்ன? பவுல் தன் வாசகர்களுக்குக் கொடுக்கும் நம்பிக்கை என்ன?***

பவுலின் இனத்தாரில் சிலர் சுவிசேஷ செய்திக்கு செவிகொடுக்க மறுத்தார்கள்; அது 'மிகுந்த துக்கத்தையும் இடைவிடாத மனவேதனையையும்' அவருக்குக் கொடுத்தது. ரோமர் 9:2. ஆனால் மீதமான ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். மனிதர் கள் தோற்றாலும் தேவனுடைய வாக்குறுதிகள் தோற்பதில்லை. தேவனுடைய வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும்; அவற்றை நாம் உரிமைகோரினால் நம் வாழ்விலும் அவை நிறைவேறும்.

மனிதர்களை நம்பி ஏமாந்த அனுபவம் உண்டா? மற்றவர்களையும் உங்களையும் நீங்கள் ஏமாற்றி இருக்கிறீர்களா? அதற்குக் கணக்கே கிடையாதல்லவா? உங்களுடைய நம்பிக்கை யார்மேல் இருக்கவேண்டும் என்பதுபற்றி இந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண் டீர்கள்?

## இடறுதல்

*'இப்படியிருக்க நாம் என்னசொல்லுவோம்? நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே. நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள்.' ரோமர் 9:30-32.*

***இந்த வசனங்கள் சொல்லும் செய்தி என்ன? ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் எழுதப்பட்ட இந்தச் செய்தியின் நியதிகள் இன்று நமக்கு எவ்வாறு பொருந்தும்? அன்று இஸ்ரவேலரில் சிலர் செய்த அதே தவறுகளை இன்று நாம் எவ்வாறு தவிர்க்கலாம்?***

இஸ்ரவேலர் எவ்வளவோ முயன்றும் பெறமுடியாமல் தவித்ததை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே தேவன் விரும்பினார்; ஆனால், அவர்கள் பெற்றுக்கொள்ளாததற்கான காரணத்தை அவர்களுக்கு பவுல் சொல்கிறார்.

ஆனால், அவ்வாறு கடுமையாக முயன்றிராத புறஜாதியாரை தேவன் ஏற்றுக்கொண்டிருந்தார். தங்களுடைய சொந்த நலன்களிலும் நோக்கங்களிலும் அக்கறை காட்டி வந்தவர்கள், சுவிசேஷம் தங்களுக்குச் சொல்லப்பட்டபோது, அதின் மேன்மையை உணர்ந்து, அதை ஏற்றுக்கொண்டார்கள். இயேசு கிறிஸ்துவை தங்கள் பதிலாளியாக அவர்கள் ஏற்றுக்கொண்டதால், அவர்களை நீதிமான்களாக தேவன் ஏற்றுக்கொண்டார். அது விசுவாசம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாக இருந்தது.

இடறுதற்கான கல்லில் இஸ்ரவேலர் இடறினார்கள். ரோமர் 9:33. தேவன் அனுப்பியிருந்த மேசியாவை எல்லாரும் அல்ல (அப் 2:41), ஒரு சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். மேசியாவைக் குறித்து அவர்களது எதிர்பார்ப்பு தவறானதாக இருந்ததால், அவர் வந்தபோது அவரைப் புறக்கணித்தார்கள்.

கடைசியாக, பழைய ஏற்பாட்டிலிருந்து மேலும் ஒரு வசனத்தை பவுல் மேற்கோள் காட்டுகிறார்: 'இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.' ரோமர் 9:33. இரட்சிப்பின் திட்டத்தில் மெய்யான விசுவாசத்தின் முக்கியத்துவத்தை மீண்டும் பவுல் இங்கு காட்டுகிறார். (1பேதுரு 2:6-8 வசனங்களையும் பார்க்கவும்.) தவறுதற்கான கன்மலையா? ஆனாலும், அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் வெட்கப்பட்டுப் போவதில்லையா? ஆம், அநேகருக்கு இயேசு இடறுதற்கான கல்லாக இருக்கிறார்; ஆனால் அவரை அறிந்து, அவர்மேல் அன்புகூருகிறவர்களுக்கு அவர் 'இரட்சிப்பின் கன்மலை'யாக இருக்கிறார். சங் 89:26.

இயேசு உங்களுக்கு'இடறுதற்கான கல்லாக' அல்லது 'தவறுதற்கான கன்மலையாக' இருந்திருக்கிறாரா? அதாவது, நீங்கள் செய்யும் எப்படிப்பட்ட காரியங்கள் அத்தகைய சூழ்நிலையை உருவாக்கின? அதிலிருந்து எவ்வாறு விடுபட்டீர்கள்? இயேசுவோடு அத்தகைய மோசமான உறவு மீண்டும் உண்டாகாமல் இருப்பதற்கு அதிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

"தங்களுக்குப் பரலோகச் சந்தோஷமுண்டு என்று தங்களின் தெரிந்துகொள்ளுதல்பற்றி அநேகர் நினைக்கிறார்கள்; இதுவேதாகமம்சொல்லும்தெரிந்துகொள்ளுதல் அல்ல. பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்புக்காகப் பிரயாசப்படவே மனிதன் தெரிந்துகொள்ளப்படுகிறான். சர்வாயுதவர்க்கத்தைத் தரித்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட தெரிந்துகொள்ளப்படுகிறான். பரிசுத்தமற்ற ஒவ்வோர் இச்சைக்கும் எதிராகப் போராட தேவன் அவனுக்கு வழங்கியுள்ள வழிவகைகளைப் பயன்படுத்த தெரிந்துகொள்ளப்படுகிறான். விழித்திருந்துஜெபிக்கவும், வேதவாக்கியங்களை ஆராயவும், சோதனைக்கு உட்படாமல் தப்பவும் தெரிந்துகொள்ளப்படுகிறான். தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்க தெரிந்துகொள்ளப்படுகிறான். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படியத் தெரிந்துகொள்ளப்படுகிறான். இதுவே வேதாகமம் சொல்லுகிற தெரிந்துகொள்ளுதல்" – *EGW, TM, p 453,454.*

"எந்த மனிதனாலும் நித்தியமானவரின் குணத்தையும் கிரியைகளையும் முற்றிலும் புரிந்துகொள்ளமுடியாது. உயர்ந்த சிந்தனையாளர்களுக்கும் பண்பாளர்களுக்குமானாலும் சரி, பெலவீனமும் அறியாமையும் உள்ளவர்களுக்கானாலும் சரி, பரிசுத்தர் மறைபொருளாகவே இருப்பார். 'மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது; நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்.' சங் 97:2. ஈடுஇணையற்ற வல்லமையோடும் விவரிக்கமுடியா இரக்கத்தோடும் அவர் நம்மை அனுகுகிறார் என்று புரிந்துகொள்ளலாம். நம்மால் முடிந்த வரையிலும் அவருடைய நோக்கங்கள் பற்றிப் புரிந்துகொள்ளலாம்; அதற்குமேல் சர்வ வல்லவரின் கரத்தையும், அன்பு நிறைந்தவரின் உள்ளத்தையுமே நம்பியிருக்கவேண்டும்" – *EGW, Education, p 169.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1 *நாம் பிறக்கும்முன்னரே நம்மில் சிலரை இரட்சிப்புக்கும், சிலரை அழிவுக்கும் தேவன் தெரிந்துகொண்டிருப்பதாக கிறிஸ்தவர்கள் சிலர் போதிக்கிறார்கள். "தேவன் தம் நித்திய ஞானம் மற்றும் அன்பின்படி ஒருவரை அழிவுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் எப்படிப்பட்ட தீர்மானங்களைச் செய்தாலும், அவருடைய முடிவு அழிவாகத்தான் இருக்கும்; அவர் முடிவு நரகம்தான்" என்று நம்புகிறார்கள். இந்தக் கருத்து ஏன் தவறானது? இது ஏன் உண்மைக்கு முற்றிலும் முரணாக உள்ளது?*

2 *முற்கால இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அழைப்பிற்கும் இன்றைய செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பிற்கும் உள்ள ஒற்றுமையை எவ்வாறு காணமுடிகிறது? இதிலுள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் என்ன? எவ்விதங்களில் நாம் சிறப்பாகப் பங்காற்றுகிறோம்? அல்லது மோசமாகச் செயல்படுகிறோமா? உங்கள் பதிலுக்குக் காரணம் கூறுங்கள்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*